(6) அறிவிப்பு

அவையுரிமைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1970–71-ம் ஆண்டுக்குரிய அவையுரிமைக் குழுவிற்கு தமிழ் நாடு சட்டப் பேரவையின் பதினைந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்பொருட்டு கீழ்க்கண்ட பதினான்கு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டார்கள்.

1. திரு. எ. பாலசுப்பிரமணியன்.
2. திரு. செ. கந்தசாமி கவுண்டர்.
3. திரு. எஸ். முத்துலிங்கம்.
4. திரு. பெ. சௌந்தரபாண்டியன்.
5. திரு. எஸ். இராமச்சந்திரன்.
6. திரு. சு. ம. துரைராஜ்.
7. திரு. சி. வீரமணி.
8. திரு. கொளத்தூர் கோதண்டம்.
9. திரு. மா. பா. சாரதி.
10. திரு. பெ. மலைச்சாமி.
11. திரு. வ. ஆர். மாரிமுத்து.
12. திரு. ரா. கனகசபை.
13. திரு. எஸ். ராமலிங்கம்.
14. திரு. ஆர். பொன்னப்ப நாடார்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1970–71-ம் ஆண்டு அவையுரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்கட்சித் தலைவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

சட்டப் பேரவையின் 183(4)-வது விதிக்கிணங்க மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு ஜி. ஆர். எட்மண்ட் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமிக்கிறேன்.

(7) அரசினர் மசோதா.

தமிழ் நாடு 1970-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 9/1970).

THE HON. THIRU K. A. MATHIALAGAN: Sir, I move—'That the Tamil Nadu Appropriation (No. 2) Bill,* 1970 (L.A. Bill No. 9 of 1970) be taken into consideration'.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மசோதா பிரிவு வாரியான ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

*Published in the FORT ST. GEORGE GAZETTE Extraordinary, dated 28th March 1970.